# கால்நடை பராமரிப்புத்துறை

கரூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் கீழ்க்காணும் பதவிக்கு தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகின்றன.

| வ.எ | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை (01.07.2019 அன்றுள்ளபடி) | இனசுழற்சி | கல்வி மற்றும் பிற தகுதிகள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | 1 | GT Non Priority (Women) (Destitute Widow) | 8-ம் வகுப்பு தேர்வு மற்றும் மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும் | Level -1 Rs.15700-50000/- |

1. விண்ணப்பதாரர் தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் வசிப்பதற்கான ஆதாரத்தின் நகலை இணைத்திட வேண்டும். (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்று)
2. காலிப்பணியிடம் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளக்கிடயதாகும்.
3. மேற்கண்ட ஒரு பதவிக்கு விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) 32 ஆகும். பொதுப்பிரிவினருக்கு 30 ஆகும். (01.07.2019 அன்றுள்ளபடி)
4. விண்ணப்பங்களை இலவசமாக சம்பந்தப்பட்ட மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக பணி நேரத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் சுயவிலாசமிட்ட ரூ.5/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய உறையுடன் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர் இணையதளம் / மண்டல இணை இயக்குநர் இணையதளத்தில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மண்டல இணை இயக்குநர் (மண்டல இணை இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை பெருமருத்துவமனை வளாகம், கொளந்தாகவுண்டனூர், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் 639 004) என்ற முகவரிக்கு 12.02.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும்.
6. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை மேல் உறையின் மீது பெரிய எழுத்துகளில் தவறாது குறிப்பிட வேண்டும்.
7. மேற்கண்ட பதவிகளுக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். நேர்முகத் தேர்வினை எந்த நிலையிலும் நிறுத்துவதற்கும் / ரத்து செய்வதற்கும் மாவட்ட ஆட்சியருக்கு முழு அதிகாரம் உண்டு. நேர்முகத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் இன சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
8. மேல்குறிப்பிட்ட அனைத்து பதவிகளுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு 10 வருடம் உச்ச வயது வரம்பில் கூடுதலாக வழங்கப்படும்
9. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி கல்லூரி படிப்பிற்கு குறைந்ததாக இருந்தால், ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு விண்ணப்பதாரர் மற்றும் ஆதரவற்று விதவைகள் எந்த சாதியை சார்ந்தவராக இருப்பினும் குறைந்த அளவு பொதுக் கல்வியை காட்டிலும், மேற்பட்ட பொதுக் கல்வியை தகுதியை பெற்றவராய் இருந்து அல்லது கல்லூரி படிப்பு பட்டம் பெற்றிருந்து நியமிக்கப்படுவதற்கு மற்றபடி தகுதி உடையவராய் இருந்தால் நியமிக்கப்படுவதற்காக வயது வரம்பு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அந்த வயது வரம்பு அவருக்கு பொருந்தாது.

21.01.20.

மாவட்ட ஆட்சியர்,
கரூர்

21/1/2020